**ஹோட்டல் டெவலபெர்ஸ் (லங்கா) பிஎல்சி - 2015**

-----------------------------------------------------------

ஹோட்டல் டெவலபெர்ஸ் (லங்கா) பிஎல்சி இன் 2015 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றல் கூற்று, காசுபாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிச்சயிக்கின்ற அவ்வாறான உள்ளகக் கட்டுப்பாடும் இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைதிறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்குகியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலபர்ஸ் (லங்கா) பிஎல்சி இன் 2015 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயத்தின் மீதான அழுத்தம்**

2017 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள வைப்பதற்கு அல்லது நவீனப்படுத்தப்படவுள்ள முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டு கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 12.3 இல் விபரிக்கப்பட்டுள்ள நியாயப் பெறுமதியின் அங்கீகாரம் மீது நான் கவனயீர்ப்புச் செய்கின்றேன். இவ்விடயம் காரணமாக எனது அபிப்பிராயம் முனையுள்ளதாக்கப்படவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாடு (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) எல்கேஏஎஸ்-16: ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

அகற்றப்பட்ட சொத்துக்கள் மீதான கிரயம் மற்றும் திரண்ட பெறுமான தேய்வான ரூபா 6,755,643 பெறுமதியானது மீளாய்வு காலத்தின் போது கணக்கு புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 1,625,979,070 கிரயமான ஆதனம், பொறி, உபகரணங்களின் ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் கம்பனியின் காசு உட்பாய்ச்சல் உருவாக்கத்திற்கு தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன.

**(ஆ) எல்கேஏஎஸ்-17: குத்தகை**

விளையாட்டு கட்டிடத்தொகுதியை நிர்மானிப்பதற்கான நிலத்தினை ஐந்து வருடங்களுக்கு பயன்படுத்துவதன் பொருட்டு இலங்கை அரசாங்கமும் கம்பனியும் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தமொன்றினுள் நுழைந்திருந்தன. இருந்தபோதிலும் நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு மாறாக அந்நிலத்தில் நிர்மானிக்கப்பட்ட கட்டிடமானது 40 வருடங்களுக்கு பெறுமானதேய்வு செய்யப்பட்டிருக்கிறது.

**(இ) எல்கேஏஎஸ்-19: ஓய்வூதிய நலக் கடப்பாடு**

31 திசம்பர் 2015 ல் கம்பனியின் இத்திட்ட பொறுப்பாக (Plan Liability) ரூபா 104,523,856 காணப்பட்ட அதேவேளை எதிர்கால கடப்பாடுகளை குறைக்கும் வகையில் இத்திட்ட சொத்துக்கள் (Plan Assets) முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான விடுதி வாடிக்கையாளருக்கான கடன் எல்லைகளை கம்பனி வடிவமைத்திருந்த போதும், அக்கடன் எல்லைகளை விஞ்சிய ரூபா 3.5 மில்லியன் பெறுமதியான ஆறு நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) இலங்கை கிரிகட் சபையிடமிருந்து மீளபெறக்கூடியதும் 2015 திசம்பர் 31 இல் 150 நாட்களுக்கு அதிகமாக தொடர்ந்து நிலுவையாயிருக்கின்றதுமான ரூபா 3 மில்லியன் வருமதி நிலுவையின் மீதான ஊறுசேதத்திற்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 171(6) | கம்பனி பதிவாளரின் அறிவித்தல் ஒன்றை பெற்றுக்கொண்டதற்கமைவாகவே ஐந்தொகை திகதி சேர்ப்பு அல்லது மாற்றம் என்பன விளைவிற்குள்ளாதல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி அவ்வாறான அறிவித்தலை பெற்றுக்கொள்ளாது இம் மீளாய்வாண்டு தொடக்கம் ஐந்தொகைத் திகதியினை 31 மார்ச் இலிருந்து 31 திசம்பர் என மாற்றியமைத்துள்ளது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான கம்பனியின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 275,695,000 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 91,713,000 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 183,982,000 ஆன வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. மேற்கொள்ளப்படுகின்ற புதுபித்தல் செயற்திட்டத்தினால் உணவுவிடுதி 40 வீதமான இயலளவில் செயற்பட்டமையே 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

கம்பனியின் மீளாய்வாண்டினதும் (ஏப்ரல் 01 தொடக்கம் 2015 மார்ச் 31 வரை) கடந்த நான்கு வருடங்களினதும் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில், கம்பனியின் பெறுமதிச் சேர்க்கைகள் 2011/2012 மற்றும் 2012/2013 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இருப்பினும் இது 2013/2014 இல் 14 வீதத்தினால் குறைவடைந்துள்ளதுடன் மீண்டும் 2014/2015 இல் 3 வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2014/2015 மற்றும் 2015/2016 ஆண்டுகளிற்கான சம்பளம்,

வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன சாட்டுதல் செய்யப்பட்ட பின்னரான (பங்குலாபத்திற்கு முன்) கம்பனியின் பெறுமதி சேர்மானமானது முறையே ரூபா 1,275,259 மற்றும் ரூபா 1,121,948 ஆக காணப்பட்டது. இது 2015/2016 ஆம் ஆண்டில் 12 சதவீத வீழ்ச்சியினை காட்டுகின்றது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------

### (அ) முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

-----------------------------------------

2015 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்களானது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பின்வருமாறு காணப்பட்டது.

| விபரம் | 2015.12.31 இல் முடிவடைந்த 09 மாத காலப்பகுதிக்குரியது | 2014/2015 ஆண்டுக்கானது |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை (%) | 82.14 | 80.66 |
| இலாப எல்லை (விற்பனைக்கிரயத்தில் மொத்த இலாபம்) (%) | 460.03 | 422.65 |
| தேறிய இலாப விகிதம் (%) | 5.83 | 11.57 |
| விற்பனைப்புரள்வில் நிதிக்கிரயம் (எண்ணிக்கை) | 0.04 | 1.58 |
| இருப்புப் புரள்வு (தடவைகள்) | 7.3 | 11.01 |
| நடைமுறை விகிதம் | 3.02:1 | 7.27:1 |
| அமில பரிசோதனை விகிதம் | 2.95:1 | 6.31:1 |
| கிடைக்கத்தக்க அறையொன்றிற்கான வருமானம் | 6,991 | 10,276 |
| அறைக்கான சராசரி விலை | 20,326 | 18,906 |

2015 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான மொத்த இலாப எல்லை மற்றும் இலாப எல்லை என்பன முறையே 1.48 சதவீதம் மற்றும் 37.38 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும் தேறிய இலாப எல்லை வீதமானது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 5.74 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

### (ஆ) தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---------------------------------------------------

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011/2012ஆம் ஆண்டு மற்றும் அதனைத்தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கான கம்பனியின் தொழிற்படுமுதல் பற்றிய கடன் கொடுத்து தீர்க்கும் எல்லை என்பன பின்வருமாறு.

| விபரம் | 2015/16 Rs.000 | 2014/15 Rs.000 | 2013/14 Rs.000 | 2012/13 Rs.000 | 2011/12 Rs.000 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 1,611,530 | 1,900,448 | 2,460,383 | 1,458,250 | 2,553,586 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,218,212 | 794,141 | 1,457,961 | 8,851,962 | 4,103,034 |
| **தொழிற்படு மூலதனம்** | **393,318** | **1,106,307** | **1,002,422** | **(7,393,712)** | **(1,549,448)** |
| தேறிய சொத்துக்கள் | 15,084,682 | 14,142,907 | 15,356,784 | (668,611) | 11,887,620 |
| கூறப்பட்ட மூலதனம் | 20,466,456 | 20,466,457 | 18,116,157 | 452,261 | 452,261 |
| **பொறுப்புக்களைத் தீர்க்கும் எல்லை** | **(5,381,774)** | **(6,323,550)** | **(2,759,373)** | **(1,120,872)** | **11,435,359** |

2011/2012 இலிருந்து தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கான கம்பனியின் நடைமுறைச்சொத்துக்கள் மற்றும் நடைமுறைப்பொறுப்புக்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்யும் போது, கம்பனியின் தொழிற்படு மூலதனம் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டதுடன் 2013/2014 ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நேர்க்கணிய பொறுப்புக்களை தீர்க்கும் ஆற்றலைக் காட்டுகின்றது. எனினும் கூறப்பட்ட மூலதனத்தை அதே காலத்திற்குறிய தேறிய சொத்துடன் பகுப்பாய்வு செய்கையில், 2012/2013 ஆண்டிலிருந்து எதிர்க்கணிய பொறுப்புக்களை தீர்க்கும் எல்லை அவதானிக்கப்பட்டது.

(ii) 2015 மார்ச் தொடக்கம் ரூபா 3,872,956 சாதகமான வங்கி மீதி ஒன்று தனியார் வங்கியொன்றின் நடைமுறைக்கணக்கில் எவ்வித உழைப்புகளையும் மேற்கொள்ளாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

உணவுவிடுதிக்கான தந்திரோபாய நோக்கினை கருத்திற்கொண்டு கம்பனியினால் இடைக்காலத்திற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக்கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மை பேறுகளுக்கிடையில் 11 சதவீதத்திலிருந்து 33 சதவீதம் வரையிலான வீச்சில் முக்கிய முரண்களின் போக்குகள் அவதானிக்கப்பட்டன. ஆகையால், பாதீடானது நிதிக்கட்டுப்பாட்டிற்கான ஒரு ஆக்கபூர்வமான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பகுதிகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு கால மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) கடன் கட்டுப்பாடு | கடன் எல்லைகளினை அமைத்தல் மீதான கட்டுப்பாடு |